**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக் கிழமை பிரசங்கம்**
**02 செப்டம்பர் 2016 / 30 துல்கஃதா 1437 ஹிஜ்ரி**

# ஸப்ர்: பொறுமையாக இருப்பதன் முக்கியத்துவம்

اَلْحَمْدُ للهِ الَّذِي نَزَّلَ الْفُرْقَانَ عَلَى عَبْدِهِ لِيَكُونَ لِلْعَالَمِينَ نَذِيرًا، الَّذِي لَهُ مُلْكُ السَّمَوَاتِ وَالأَرْضِ وَخَلَقَ كُلَّ شَيْءٍ فَقَدَّرَهُ تَقْدِيرًا، وَخَلَقَ الإِنْسَانَ مِنْ نُطْفَةٍ أَمْشَاجٍ يَبْتَلِيهِ فَجَعَلَهُ سَمِيعًا بَصِيرًا، ثُمَّ هَدَاهُ السَّبِيلَ إِمَّا شَاكِرًا وَإِمَّا كَفُورًا. وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُه، اَللّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُوْن.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

சிறப்புமிக்க இந்நாளில், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" (பக்தியை) அதிகரித்துக் கொள்ள வேண்டுமென என்னையும் உங்களையும் கேட்டுக் கொள்கிறேன். அல்லாஹ் தான், பிரபஞ்சத்தின் அதிபதி என்பதை உணருங்கள்! எனவே, அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக்

கட்டுப்பட்டு நடப்பதுடன், அவனால் தடுக்கப்பட்ட விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்!

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

நாம் அனைவரும் அல்லாஹ்வின் கிருபையையும் அவனது மன்னிப்பையும் விரும்புபவர்களாக, எதிர்பார்த்தவர்களாக உள்ளோம். அல்லாஹ்வின் திருப்தியை அடைய வேண்டுமென்பதற்காக, அல்லாஹ்வின் கடமைகளையும் வணக்க வழிபாட்டுச் செயல்களையும் நிறைவேற்றுவதற்கு வாழ்நாள் முழுவதும் கடின முயற்சி செய்து வருகிறோம். அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் நாம் அனைவரும் வெற்றிபெற்றவர்களாக ஆகுவோமாக!

திருக்குர்ஆனில் அல்லாஹ் ஒரு சிறப்பான பண்பைப் பற்றி நூறுக்கும் அதிகமான இடங்களில் கூறுகிறான். அப்பண்பு எவர்களிடம் காணப்படுகிறதோ அவர்களோடு, தான் எப்போதும் இருப்பதாகவும் அல்லாஹ் கூறுகிறான். எந்த பண்பைப் பற்றி இங்கு நான் குறிப்பிடுகிறேன் என்பதைத் தாங்கள் அறிவீர்களா? அது தான் "ஸப்ர்" எனப்படும் பொறுமை ஆகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "ஆலிஇம்ரான்" எனும் அத்தியாயத்தின் 200-வது வசனத்தில் கூறுகிறான்:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱصۡبِرُواْ وَصَابِرُواْ وَرَابِطُواْ وَٱتَّقُواْ ٱللَّهَ
لَعَلَّكُمۡ تُفۡلِحُونَ ٢٠٠

பொருள்: மு∴மின்களே! பொறுமையுடன் இருங்கள்; (இன்னல்களை) சகித்துக் கொள்ளுங்கள்; (ஒருவரை ஒருவர்) பலப்படுத்திக் கொள்ளுங்கள்; அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்; (இம்மையிலும், மறுமையிலும்) நீங்கள் வெற்றியடைவீர்கள்!

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!
இஸ்லாம், "ஸப்ர்" (பொறுமை) எனும் சிறப்புப் பண்பைக் கடைப்பிடிக்குமாறு மிகவும் வலியுறுத்திக் கூறுகிறது. இப்பண்பு, சோதனைகளை விட்டும் விடுபட முடியாத இவ்வுலக வாழ்க்கையில், சோதனைகளை எதிர்கொள்வதற்காக அல்லாஹ்வினால் மனிதகுலத்துக்கு வழங்கப்படும் சிறப்புமிக்க பண்பாகும்.

ஜமாஅத்தார்களே!
சோதனைகள் ஏற்படும் போது, நம்மில் சிலர், நம்மால் "ஸப்ர்" செய்ய முடியுமா, பொறுமையைக் கடைப்பிடிக்க முடியுமா, எந்த அளவு நம்மால் பொறுமையைக் கடைப்பிடித்து, தொடர்ந்து வாழ முடியும் என தம்மைத் தாமே கேட்க ஆரம்பிக்கின்றார்கள். அறிந்து கொள்ளுங்கள்! நாம் "ஸப்ர்" செய்து தொடர்ந்து வாழ முடியும். ஒவ்வொரு மனிதனிடமும் பொறுமையைக் கடைப்பிடிக்கும் ஆற்றல் உள்ளது என இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கூறியுள்ளார்கள். குறிப்பாக, ஓரிறை நம்பிக்கையாளர்களாகிய மு∴மின்களால் "ஸப்ர்" செய்ய முடியும். காரணம், மு∴மின்களிடம் காணப்படும் "ஈமான்" எனும் ஓரிறை நம்பிக்கை அவர்களுக்கு "ஸப்ர்" செய்வதற்கான ஆற்றலை வழங்குகிறது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அல்-பகரா" எனும் அத்தியாயத்தின் 155-156 வரையிலான வசனங்களில் கூறுகின்றான்:

وَلَنَبْلُوَنَّكُم بِشَيْءٍ مِّنَ الْخَوْفِ وَالْجُوعِ وَنَقْصٍ مِّنَ الْأَمْوَالِ
وَالْأَنفُسِ وَالثَّمَرَاتِ ۗ وَبَشِّرِ الصَّابِرِينَ ﴿١٥٥﴾

الَّذِينَ إِذَا أَصَابَتْهُم مُّصِيبَةٌ قَالُوا إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ ﴿١٥٦﴾

பொருள்: நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம்; ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக! (பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, "நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்" என்று கூறுவார்கள்.

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் கூட அல்லாஹ்வினால் எப்படி சோதிக்கப்பட்டார்கள் என்பதை "சீராஹ்" எனும் வரலாற்று நூலில் காண்கிறோம். பயம், பீதிகள், வாழ்க்கை வசதிகளில் குறைபாடு போன்ற பல சோதனைகளால் அவர்கள் சோதிக்கப்பட்டார்கள். இமாம் புகாரி (ரஹ்) அறிவிக்கின்றார்கள்:

முஹம்மது(ஸல்) அவர்களின் குடும்பத்தார்கள் தொடர்ந்து மூன்று நாட்கள் வயிறு நிரம்ப உண்ணும் வாய்ப்பு கிடைக்கப் பெறாதவர்களாக இருந்தார்கள். இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் இறக்கும் வரை இதுதான் அவர்களின் நிலையாக இருந்தது. ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள், அவர்களின் பாசத்திற்குரிய மகன் இப்ராஹிம் முதற்கொண்டு,

அவர்களுக்குப் பிரியமான பல நபர்களை இழப்பதன் மூலமாகவும் சோதிக்கப்பட்டார்கள். தனது மகன் இப்ராஹிம் இறந்த போது இறைத்தூதர்(ஸல்) பின்வருமாறு கூறினார்கள்:
"கண்கள் கண்ணீரைச் சிந்துகின்றன; உள்ளம் கவலைக்குள்ளாகியுள்ளது. எனினும், நமது இறைவன் எதை விரும்புகிறானோ அதைத் தவிர வேறு எதையும் நம்மால் கூற முடியாது. உண்மையில், ஓ இப்ராஹீமே! உனது இழப்பால் நாங்கள் நஷ்டமடைந்துள்ளோம்" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

நான் தற்போது உங்களுடன் பகிர்ந்து கொண்ட வரலாறுகள், நமது வாழ்க்கையில் நாம் "ஸப்ர்" (பொறுமையைக்) கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டுகின்றன. நமது பாசத்திற்குரிய ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களும் ஆரம்ப கால முஸ்லிம்களும் எவ்வாறு சோதனைகளை எதிர்கொண்டு பொறுமையைக் கடைப்பிடித்தார்களோ அவ்வாறு, நாமும் தற்காலச் சவால்களையும் சோதனைகளையும் எதிர்கொண்டு அவற்றைப் பொறுமையின் மூலம் வெற்றிகொள்ள வேண்டும்.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!
"ஸப்ர்" எனும் அருட்கொடை அல்லாஹ்வினால் நமக்கு அருளப்பட்டுள்ளதால் நாம் ஒரு நாகரீகத்திலிருந்து மற்றொரு நாகரீகத்துக்கு முன்னேறி இருக்கின்றோம். நமது வாழ்க்கைத் தரம் முன்னேற்றம் காண வேண்டும் என்பதற்காக, "ஸப்ர்" எனும் பொறுமையின் மூலம் நாம் தொடர்ந்து படித்து ஆய்வு செய்து வருகிறோம். எனவேதான், முந்திய தலைமுறையினரால் கண்டுபிடிக்க முடியாத கல்வியின்

எத்தனையோ பிரிவுகளை முஸ்லிம்களால் கண்டுபிடிக்க முடிந்தது. கல்வியின் அப்பிரிவுகளால் பிற்கால சமூகங்களும் பயனடைந்து வருகின்றன. நமது தற்கால வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்காகவும், சன்மார்க்கக் கல்வி தற்கால வாழ்க்கைக்கும் தொடர்ந்து பொருந்துவதாக உள்ளது என்பதை உறுதி செய்வதற்காகவும் நமது சன்மார்க்க அறிஞர்கள் தற்கால விஷயங்களைப் பற்றி தொடர்ந்து விவாதித்து வருகிறார்கள்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

இன்று, ”ஸப்ர்” எனும் பரம்பரைச் சொத்தை நமது வாழ்க்கையிலும் ஏற்படுத்திக் கொள்வது நமது கடமையாக உள்ளது. எனினும், தற்கால நவீன வாழ்க்கைச் சூழ்நிலையில் ”ஸப்ர்” ரை உண்மையாகப் புரிந்து கொள்வது மிகவும் சிக்கலான விஷயமாக இருக்குமென நான் நினைக்கிறேன். காரணம், தற்காலத் தனிநபர்கள் தமது தேவைகளை முடிந்த அளவு குறுகிய காலத்தில் அடைந்து கொள்ள விரும்புகிறார்கள். பொருட்கள், பதில்கள் ஆகியவற்றை மிக விரைவாக கிடைத்து விட வேண்டுமென விரும்புகிறார்கள். சில தனிநபர்கள் குறுகிய கால உலகிலும், சூழலிலும் சிக்கித் தவிக்கின்றார்கள்.

உதாரணமாக, நாம் உணவைத் தயார் செய்யுமாறு கேட்டுக் கொண்டால், முடிந்த அளவு குறுகிய காலத்தில் மிக விரைவாக அது தயார் செய்யப்பட வேண்டுமென்றும், பரிமாறப்பட வேண்டுமென்றும் விரும்புகிறோம். வெறிப்பிடித்த போக்குகளும் அவற்றின் செயல்பாடுகளும் மிக விரைவில் காலாவதியாகி விடுகின்றன. சில மாதங்களில் மறக்கனிக்கப்பட்டும் விடுகின்றன. இவ்விதமான நோய், சில மக்கள் கல்வியறிவுகளையும் தகவல்களையும் கூட குறுக்கு வழியில் பெறக் காரணமாக உள்ளது.

அவர்கள் கல்விகளை மிக விரைவாகவும், சுருக்கமான தகவல்களையும் பெற விரும்புகிறார்கள். இதன் விளைவாக, வாழ்க்கையில் ”ஸப்ர்” ரைக் கடைப்பிடிக்காத, அதற்கு முக்கியத்துவமளிக்காத தனிநபர்கள் உருவாகி வருவதைக் காண்கிறோம்.

இந்த தலைப்பு மிகவும் முக்கியமானதாக உள்ளதால், அடுத்து வரும் வெள்ளிக்கிழமை பிரசங்கங்களில் இத்தலைப்பைப் பற்றி இன்ஷாஅல்லாஹ் விரிவாக விவாதிக்கப்படும். அத்துடன், நமது வாழ்க்கையில் ”ஸப்ர்” ரை நாம் எவ்வாறு கடைப்பிடிக்க முடியும் என்பதற்கான குறிப்புகளும் வழங்கப்படும். கல்வியைத் தேடுவதிலும் ”ஸப்ர்” வேண்டும். இணையதளங்களில் நாம் பெறும் விஷயங்களை எளிதில் நம்பி விடக் கூடாது. தற்காலத்தில் நமது சமுதாயத்தைத் தொற்றியுள்ள, நமது அமைதிக்கு ஆபத்தாக உள்ள தீவிரவாதப் பிரச்சனைகளைக் கையாளுவதிலும் ”ஸப்ர்” கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதெல்லாம் இதில் அடங்கும்

ஜமாஅத்தார்களே!

இன்றிரவு, துல்ஹஜ் மாதம் துவங்குவதை முன்னிட்டு பின்வரும் ஹதீதில் நாம் சிந்தனை செய்வோமாக! ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து தினங்களில் புரியப்படும் நற்காரியங்கள் அல்லாஹ்விடத்தில் எந்தளவு பிரியமானவையாக உள்ளனவோ, அந்தளவு வேறு எந்நாட்களிலும் புரியப்படும் நற்காரியங்கள் இல்லை. அந்நாட்களில் புரியப்படும் நற்காரியங்களுக்கு அதிக நன்மைகள் வழங்கப்படுகின்றன. (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

எனவே, துல்ஹஜ் மாதத்தின் புனிதமிக்க நாட்களில் வணக்க வழிபாட்டுச் செயல்களையும், குறிப்பாக, திக்ரு செய்தல், அல்லாஹ்விடத்தில் துஆக்கள் (பிரார்த்தனைகள்) செய்வது போன்றவற்றையும் அதிகரித்துக் கொள்வோமாக!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, அவனை வணங்கி வழிபடுவதில் நமக்கு "ஸப்ர்" ரை வழங்க வேண்டுமென்றும், நமது அனைத்து விவகாரங்களையும் எளிதாக்க வேண்டுமென்றும் அல்லாஹ்விடம் நாம் வேண்டிக் கொள்கிறோம். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.